**தலைப்பு 122 – பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 122 – பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.20 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது. இவை அவதானிக்கப்பட்டன.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கை களை நிதி மற்றும் திணைக் களத்தின் கட்டளைகளுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை – போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2.1 |
| | | 2. கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறை பாடுகள் | 2.11 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை. | 2.14 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. முகாமைத்துவப் பலவீனங்கள்<br>2. தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்<br>3. இணக்கமின்மைகள் | 2.7<br>2.6<br>2.15 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ள ப்பட வேண்டும். | 1. பெறுகை செயற்பாடு களை செயற்படுத்து வதிலுள்ள குறைபாடு கள்<br>2. சிக்கனமற்ற கொடுக் கல் வாங்கல்கள் | 2.2.2<br>2.5 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத் தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்ற தெனவும் | 1. வாகன உபயோகத் திலான குறைபாடுகள்.<br>2. சொத்துக்களின் குறைப் பயன்பாடு/ விளைவற்றுக் காணப்படல். | 2.3(அ)<br>2.3(ஆ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக் கப்படுகின்றன எனவும் மற்றும் தாம் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சி னால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவின த்திற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடுகள் தம்மால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படல். | 1. வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கட்டுப்பாடுகளுக்கு உட்படல்<br>2. கட்டுநிதி கணக்கில் குறைபாடு<br>3. பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடு<br>4. வங்கிக் கணக்கு செயற்படுத்தலில் குறைபாடு | 2.1.1(அ)<br>2.11<br>2.12<br>2.13 |

| | | | |
|---|---|---|---|
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | ஒதுக்கீடு செய்த ஏற்பாடு களைப் பயன்படுத்தாமை | 2.8(அ)(i) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத் தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனை களுக்கு உட்படுத்துதல் | 1. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.9 |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடு கள் | 2.10 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 செய்பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சினால் 16 பிரதான செய்பணிகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தினைக் காட்டக்கூடிய முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்கு 2018 அக்தோபர் 26 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செய்பணிகளின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அங்கீகாரம் பெற்றிருந்த நிர்மாணவேலை ஒன்றும் 2017 ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும் 2018 மே 10 அளவிலும் நிர்மாண வேலை தொடர்பாக விலைமனு அழைத்தல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

### 2.2 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

#### 2.2.1 பெறுகை திட்டமிடல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்முறையினூடாக வழங்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றிக் கொள்வதற்காக ரூபா 127.8 மில்லியனிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 74.8 மில்லியன் தொகை பயன்படுத்தியிருந்தது. ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த பெறுகைத் திட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் விரிவான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை நேரசூசி தயாரித்திருக்கவில்லை.

### 2.2.2 பெறுகை செயன்முறையினை செயற்படுத்துதல்

"Buddhist Ideals of Good Governance" கிரந்தம் வெளியீட்டு விழாவின் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கு செய்தல் போட்டி அடிப்படையில் கூறுவிலை அழைத்தல் மேற்கொள்ளப்படாமல் ரூபா 3,300,175 தொகைக்கு செலசினே தொலைக்காட்சி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ் விடயத்தை வீடியோ பண்ணுவதற்காக தகவல் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு அமைச்சின் உதவி செயலாளர் தீர்மானித்திருந்த போதும் மற்றும் பணம் ஏதும் செலுத்தாமல் பெறக்கூடியதாக இருந்த போதும் செலசினே நிறுவனத்திற்கு வழங்கி ரூபா 175,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

**எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை**

2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சொந்தமாக காணப்படும் 27 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

ரூபா 14,276,500 தொகை பெறுமதியான நான்கு வாகனங்கள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**(இ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

2016 மார்ச் 31 திகதிய 05/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை 3.1.6 இன் பிரகாரம் 2018 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமெனினும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 06 மாதங்கள் தாமதித்த 2018 செப்டம்பர் 12 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் முறைசாராத விதமாக பயன்படுத்துதல்**

2015 ஆண்டின் போது தகவல் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆண்டின் போது விபத்திற்கு உள்ளாகியிருந்ததுடன் 2018 அக்தோபர் அளவிலும் திருத்தவேலை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை. தகவல் திணைக்களத்தினால் வாகனத்தை திருப்பித் தருமாறு வேண்டியிருந்த போதிலும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 ஈடுபாட்டுப் பொறுப்புக்களும் பொறுப்புக்களும்

**பொறுப்புக்கள் தீர்க்காமை**

ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 12,623,443 இற்கான பொறுப்புக்கள் கணக்காய்வுத் திகதியாகிய மே 18 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சின் மின் உயர்த்தியை பொறுத்துதல் மற்றும் கட்டிட சட்டகம் தயாரித்தலுக்காக ரூபா 6,963,652 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மின் உயர்த்தி பொருத்தப்பட்டு 05 வருடங்கள் போன்ற குறுகிய காலத்தில் உடைந்து விழுந்து இவ்வாறான ஆபத்து நிலைமை ஏற்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 1,603,850 தொகை கிரயம் ஒன்று மேற்கொண்டு 2018 ஜனவரி மாததத்தில் அதனை உடைத்து அகற்றப்பட்டிருந்தது. மேலும், உடைத்து அகற்றப்பட்ட மின்தூக்கி எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாது அமைச்சின் வளவில் 2018 கணக்காய்வுத் திகதி வரை காணப்பட்டது.

## 2.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டிய குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி | |
| 2012 | 8(ஆ)(ii) | ரன்மினிதென்ன டெலிசினிமா பூந்தோட்டத்திற்காக தனியாக சட்டமொன்று தயாரித்தல் |
| 2012 | 12(அ) | ரன்மினிதென்ன இற்கு வழங்கியிருந்த அனுமதிப்பத்திரம் மற்றும் பெற்றிருந்த வருமானத் திற்கு இடையே ரூபா 99,305 இற்கான குறைவு |
| 2012 | 12(ஒ) | 2012 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த பொதுசன ஊடக ஒழுக்கநெறிக் கோவை |
| 2012 | 1.13(இ) | வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் நடாத்துவதற்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் போது நிலையான அனுமதிப் பத்திரத்திற்கு பதிலாக தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கியதனால் ஏற்பட்டுள்ள பலவீனங்கள் |
| 2014 | 3.16(அ) | கேபல் தொலைக்காட்சிக்காக அனுமதிப்பத்திரங்கள் 2012 ஆண்டின் போது பெற்றிருந்த நிறுவனம் ஒன்று சட்டவிரோதமான முறையில் செயற்படுத்தல் |

| | | |
|---|---|---|
| 2015 | 3.14(ஆ)(ii) | அமைச்சின் பதவிக் காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும் விதமாக உதவிச் செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு அமைச்சரின் பதவி முடிவடைந்த பின்னர் சேவையாற்றிய காலத்திற்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகளில் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 84,131 அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 3.18(அ) | அமைச்சினால் 2014 திசெம்பர் மாதத்தில் ரூபா 648,312 தொகை செலவிடப்பட்டு இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக "FRONTIER" என்ற பேரில் 1000 பிரதிகள் சஞ்சிகை அச்சிடல். |
| 2015 | 3.19(ஈ) | பதவியை நிரந்தரப்படுத்தியிருக்காத அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (ஊடக) பதவியில் இருக்கும் உத்தியோகத்தருக்கு தகைமை காணப்படாத போதிலும் சலுகை அடிப்படையான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல். |

## 2.7 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பொது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஆண்டில் நடைபெற்ற ரூபவாஹினி அலைவரிசை வரி செலுத்தாமல் ஒலிபரப்புச் செய்யும் இறக்குமதி செய்யப்பட்ட டெலிநாடகம் மற்றும் திரைப்பட நிகழ்ச்சித் திட்டங்களை இணங்கண்டு வரி அறவீடு செய்யும் நடைமுறை 2015 ஆண்டின் போது கணினி முறைமை செயலிழந்திருந்தமையினால் நிறுத்தப்பட்டிருந்தது. 2017 ஆண்டின் போது அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இறக்குமதி செய்யப்பட்ட விளம்பரங்கள் ஒலிபரப்பும் சந்தர்ப்பங்களை இனங்கண்டிருந்த போதும் அதற்கான உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அமைச்சின் வெகுசன ஊடக பிரிவின் மொத்த களஞ்சியத்தில் ரூபா 1,150,791 இற்கான காகிதாகிகள் மோசடி தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கு மற்றும் நட்டத்தை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது விபத்திற்கு உள்ளாகியிருந்த 02 வாகனங்களை மீண்டும் திருத்தி பயன்படுத்தாமல் 2018 ஆண்டு வரையும் காணப்பட்டது.

## 2.8 செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| 2013 | மீண்டுவரும் | 400,630,000 | 368,032,490 | 32,597,510 | 8.14 |
| | மூலதன | 1,236,370,000 | 959,320,403 | 277,049,597 | 22.41 |
| | **மொத்தம்** | **1,637,000,000** | **1,327,352,893** | **309,647,107** | **18.92** |
| 2014 | மீண்டுவரும் | 459,809,000 | 448,986,044 | 10,822,956 | 2.35 |
| | மூலதன | 823,241,000 | 599,338,577 | 223,902,423 | 27.20 |
| | **மொத்தம்** | **1,283,050,000** | **1,248,324,621** | **234,725,379** | **18.29** |
| 2015 | மீண்டுவரும் | 1,114,800,000 | 1,055,120,851 | 59,679,149 | 5.35 |
| | மூலதன | 2,411,500,000 | 323,671,898 | 2,087,828,102 | 86.58 |
| | **மொத்தம்** | **3,526,300,000** | **1,378,792,749** | **2,147,507,251** | **60.90** |
| 2016 | மீண்டுவரும் | 1,255,175,112 | 1,218,208,461 | 36,966,651 | 2.95 |
| | மூலதன | 2,148,380,000 | 284,108,960 | 1,864,271,310 | 86.78 |
| | **மொத்தம்** | **3,403,555,112** | **1,502,317,151** | **1,901,237,961** | **55.86** |
| 2017 | மீண்டுவரும் | 1,490,106,000 | 1,369,578,812 | 120,527,188 | 8.09 |
| | மூலதன | 2,330,459,170 | 332,886,486 | 1,997,572,684 | 85.72 |
| | **மொத்தம்** | 3,820,565,170 | 1,702,465,298 | 2,118,099,872 | 55.44 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

(i) 09 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,859.3 மில்லியனிற்கான மொத்த தேறிய ஏற்பாடு எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) புவிசார்ந்த ரூபவாஹினி ஒலிபரப்பு அலுவல்களுக்காக எண்ணிடல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம், செயற்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியளிப்பை சேர்ந்த உள்நாட்டு கிரயம் மற்றும் வெளிநாட்டு கடன் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது ரூபா 1,698 மில்லியனிற்கான செலவு மதிப்பீடுகளில் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினால் உட்படுத்தியிந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 செப்தெம்பர் 10 திகதி வரை அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

**10.02.13.00 கொண்ட வருமான குறியீடு – தொலைக்காட்சி நாடகம் திரைப்படங்கள் மற்றும் வாணிப நிகழ்ச்சித் திட்ட வரி**

பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

(i) திறைசேரி பிரதிச் செயலாளரின் 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 01/2015(ix) ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கையின் மூலம் 2017 செப்தெம்பர் 01 திகதி முதல் செயற்படுத்துவதற்கு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 131,138,481 தொகை, 2017 ஜூன் முதல் ஆகஸ்ட் வரை தேறிய வருமானம் ரூபா 61,890,236 மற்றும் 2017 ஆண்டில் முடிவடைந்த திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூபா 391,680,019 தொகை உட்பட கூட்டுத்தொகை ரூபா 584,708,736 தொகையும் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2007 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை 02 தனியார் ஊடக நிறுவனங்களின் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 46,847,381 தொகையான நிலுவை வரி வருமானம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவீடு செய்திருக்காததுடன் வருமானக் கணக்கில் முன்னைய ஆண்டுகளுக்காக நிலுவை வருமானம் என காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 12201 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 24,000,000 | 16,152,383 | 8,000,000 | 14,414,536 | 50,000,000 | 32,290,898 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 மற்றும் 2017 ஆண்டுகளின் போது சேவையை விட்டுச் சென்றிருந்த 02 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 203,534 இற்கான கடன் மீதிகள் கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜூலை 17 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வேறு அமைச்சுகளுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன்மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் அவ்வாறு செயற்படாமல் ரூபா 429,802 இற்கான கடன்மீதி குறிப்பிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.11 கட்டுநிதி கணக்கு

2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் கருமம் முடிவடைந்த 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்த கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டுமெனினும், 128 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கியிருந்த ரூபா 2,315,159 இற்கான நிமித்த கட்டுநிதி விடயம் முடிவடைந்து 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதத்தில் அந்த கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழ் காணப்படும் பொது வைப்புக் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 107.65 தொகையாகக் காணப்பட்டது. மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 2.84 மில்லியனிற்கான காலம் கடந்துள்ள 02 வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இல் பிரிவு (3) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது கூடிய விரைவில் திருப்பி செலுத்துவதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 18 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.13 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்துதல்

வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பித்திருக்காத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 255,542 தொகை பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.14 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | இழப்புகள் சேதங்கள் பதிவேடு | நி.பி. 110 | நாளது வரை பேணப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணினி துணைக் கருவிகள் மென்பொருட்கள் தொடர்பான தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஜ/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரை பேணப்பட்டிருக்காததுடன் சொத்துக்களை தனதாக்கிய திகதி பெறுமதி ஆகிய ஆரம்ப தகவல்களும் உட்படுத்தியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொருட் பதிவேடு | -- | நாளது வரை பேணப்பட்டிருக்காததுடன் ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அகற்றிய பண்டங்களும் பொருட் பதிவேட்டில் உட்பட்டிருந்தது. |

**2.15 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 104(1) மற்றும் 105(4) | 2017 ஆண்டில் ஏற்பட்டிருந்த 09 வாகன விபத்துக்கள் மற்றும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது ஏற்பட்டிரந்த 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை நிச்சயப்படுத்தி பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| 2006 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் 8 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப் பட்டு 2017 நவம்பர் 07 ஆம் திகதிய 2014/21 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டடத் தொகுதி யில் 7.2(ஆ) ஆம் உப பகுதி | அனுமதிப்பத்திரதார் ஒருவர் பெயர் குறிப்பிடக் கூடிய வேறு ஒரு அனுமதிப்பத்திரதாரர் நிறுவனம் ஒன்று எனினும் ஆரம்ப அனுமதிப்பத்திர தாரரினால் அனுமதிப்பத்திரதார நிறுவனங்கள் பலவற்றை பேர் குறிப்பிட முடியாது எனினும் அமைச்சு செயலாளரினால் அனைத்து அனுமதிப்பத்திரதாரர் நிறுவனங்களுக்கும் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒலிபரப்புவதற்கு இயலாத விதத்தில் தடை நீக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. |

## 2.16 மனிதவள முகாமைத்துவம்

### 2.16.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 123.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 504,475 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 14 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 70 | 58 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 23 | 09 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 18 | - | 16 |
| | | 123 | 114 | 25 | 16 |